**ஹிங்குரக்கொட பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் மேலதிகம் 02 E.G 3.8 வெளிப்படுத்தலின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு தொடர்பாக சகல வெளிப்படுத்தல்களும் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கை | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது பெறுமானத்தேய்வு கொள்கை மற்றும் பெறுமானத்தேய்வு வீதம் என்பன வெளிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
| --- | --- | --- | --- |
| | பெறுமானத்தேய்வு தொடர்பாக பெறுமானத் தேய்வு முறை மற்றும் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு விகிதம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 34,728,454 ஆன மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்விற்காக அவ்வாறு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகம் 2 இன் 1 இணைப்பில் குறிப்பிடப்பட்ட கணக்குகள் குறியீட்டின் பிரகாரம் நூலக புத்தக மீதி இருப்பின் கீழ் சொத்தாக கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் பிரதேச சபையின் ரூபா 3,899,825 ஆன நூலக புத்தகங்களின் மீதி நிதிக்கூற்றுக்களில் அகற்றப்பட்டு குறிப்பு இலக்கம் 14 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் குறிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற மூலதன செலவின மானியம் ஒரே தடவையில் வருமானத்தில் இனங்காணப்படாமல் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையின் படி விரிவான வருமானக் கூற்றில் சாட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூலதன செலவின மானியமாக கிடைத்த ரூபா | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீண்டெழும் அல்லாத செலவினங்கள் மானிய பெறுமானத்தேய்வு விகிதத்திற்கு ஒப்பாக ஆண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்ளில் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முன்னைய ஆண்டுகள் முதல் காண்பிக்கப் படுகின்ற இந்த தவறு சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 25,072,747 மொத்த பெறுமதியும் விரிவான வருமானத்தில் சாட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06(v) இன் பிரகாரம் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் வருடாந்தம் 10 சதவீதப் படி குறைந்து செல்லும் மீதி முறைமையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 32,000,000 பெறுமதிக்காக ரூபா 3,200,000 பெறுமானத்தேய்வு பெறுமதி கணிப்பிடப்படாமையின் காரணமாக அந்த பெறுமதியால் ஆண்டின் செலவினம் குறைத்தும் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்குரிய ஆரம்ப மீதி பெறுமதிகளுக்காக பெறுமானத்தேய்வை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பெறுமானத்தேய்வு பெறுமதியை சரியாக கணிப்பிடல் வேண்டும். |
| (இ) | பெறவேண்டிய ஆதன வரி கணக்கு வைக்கும் போது ரூபா 2,348,435 ஆன முற்பணமாக கிடைத்த ஆதனவரி வருமானம் ஈடுசெய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக அந்த பெறுமதியில் கிடைக்க வேண்டிய ஆதனவரி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் முற்பணமாக கிடைத்த ஆதனவரி வருமானம் பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய ஆதனவரி வருமானம் மற்றும் முற்பணமாக கிடைத்த ஆதனவரி வருமானத்திற்கிடையே தேறிய விளைவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் யாவற்றையும் காண்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,106,562 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 46,276,912 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாடகை | | |
| (i) 2016 இன் 945 ஆம் இலக்க நிர்வாகக் குழு தீர்மானத்தின் அடிப்படையில் பிரதேச சபைக்குரிய கட்டிடமொன்று 2016 நவம்பர் 16 ஆந் திகதி முதல் மாதாந்தம் 10,000 வாடகை அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதற்குரிய ரூபா 610,000 ஆன வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருக்கு மாயின் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவையாக காணப்பட்ட கடை மீதிகளில் 66 கடைகளுக்குரிய ரூபா 3,385,074 பெறுமதி 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |